


We Shine Academy™

guiding you to get through

# நடப்பு நிகழ்வுகள்
# (CURRENT AFFAIRS)

## NOVEMBER

*We Are Here..!! To Guide You..!!*



# We Shine Study Circle

# TNPSC

## நடப்பு நிகழ்வுகள்

## (CURRENT AFFAIRS)

## நவம்பர் - 28.11.2018

We Shine Academy™
guiding you to get through

Main Office @

**Weshine Study Circle**
Chromepet, Chennai
Phone: 8939144344, 8939244344

Branch Office @
**Weshine Study Circle**

Plot No: 47/60, "AK" Block,
7th Main Road, Anna Nagar
Chennai, Tamil Nadu – 600 040.

3rd Floor, West Wing, Gokul Arcarde,
No.2, Sardar Patel Road, Adyar
Chennai, Tamil Nadu – 600 020.

https://weshineacademy.com

# பொருளடக்கம்


- தமிழக நிகழ்வுகள்
- இந்திய நிகழ்வுகள்
- உலக நிகழ்வுகள்
- விளையாட்டு நிகழ்வுகள்
- அறிவியல் & தொழில்நுட்பம்
- நியமனங்கள்
- முக்கிய தினங்கள்













## தமிழக நிகழ்வுகள்

- **இரயில் பயணிகள்,** எளிதில் அரசு இரயில்வே காவல்துறை **(Government Railway Police),** இரயில்வே பாதுகாப்புப் படை **(Railway Protection Force)** ஆகியோரின் உதவியைப் பெறுவதற்காக, **"GRP (Government Railway Police)"** என்னும் உதவி செயலியை இரயில்வே துறை **ADGP சைலேந்திர பாபு** கோயம்புத்தூர் இரயில்வே சந்திப்பில் அறிமுகப்படுத்தியுள்ளார்.
  - ரயில்வே பயணிகள் எந்தவொரு சந்தேகத்திற்கிடமான பொருட்களின் புகைப்படத்தையும் இச்செயலி மூலம் பகிர்ந்து கொள்ள முடியும்.

## இந்திய நிகழ்வுகள்

- பல்வேறு வடிவங்களில் புகையிலை பயன்படுத்துவதைத் தடை செய்யவும் புகையிலைப் பொருட்களைப் பயன்படுத்துவதால் ஏற்படும் பாதிப்புகளைத் தடுப்பதை நோக்கமாகக் கொண்டு, **பஞ்சாப் மாநில அரசு, குட்கா விற்பனை செய்யும் இடங்களை தடை செய்யும் சட்டத்தை நிறைவேற்றியுள்ளது.**
  - இதன் மூலம் குட்கா விற்பனை செய்யும் இடங்களை தடை செய்த **மூன்றாவது மாநிலமாக** உருவெடுத்துள்ளது. **மகாராஷ்டிரா மற்றும் குஜராத் மாநிலங்கள்** இதற்கு முன் தடை செய்துள்ளன.

- இந்திய விமான நிலைய ஆணையமானது **(AAI – Airports Authority of India)** குறைந்த கட்டணமுடைய விமானசேவை நிறுவனமான ஏர் ஒடிசாவின் உடான் **(UDAN – Ude Desh Ka Aam Nagrik)** உரிமத்தை அதன் ஒழுங்கற்ற விமான சேவையின் காரணமாக 7 விமான நிலையங்களுக்கு ரத்து செய்துள்ளது.
  - ரத்து செய்யப்பட்ட 7 விமான நிலையங்கள் : **ஜார்சுகுடா, ராய்ப்பூர், ராய்கர், பிலாஸ்பூர், அம்பிகாபூர், ஜகதல்பூர் மற்றும் விசாகப்பட்டினம்.**

- உள்நாட்டு மற்றும் சர்வதேச சந்தைகளில் வடகிழக்குப் பிராந்தியத்தின் சுற்றுலாத் திறனை சிறப்பித்துக் காட்டும் நோக்கத்துடன், **திரிபுராவின் தலைநகரான அகர்தலாவில் சர்வதேச**

**சுற்றுலா மையத்தின் வருடாந்திர நிகழ்ச்சியின் 7வது பதிப்பு** நடைபெற்றது.

  - இந்த ஆண்டின் கருத்துரு **“சாகச சுற்றுலா” (Adventure Tourism)** என்பதாகும்.

## உலக நிகழ்வுகள்

- பிஜியில் நடைபெற்ற 2018ம் ஆண்டு பொதுத்தேர்தலில் ஆளும் கட்சியான பிஜி முதல் கட்சி வெற்றி பெற்று அக்கட்சியின் தலைவர் **“வோரெக் பயினிமராமா” இரண்டாவது முறையாக பிஜி நாட்டின் பிரதமராக தேர்வு** செய்யப்பட்டுள்ளார்.
  - பிஜி நாட்டின் அதிபர் மேஜர் ஜெனரல் ஜியோஜி கொன்ரோடி ஆவார்.
- குறிப்பு:
  - 2006ம் ஆண்டில் இராணுவத்தால் ஆட்சிக் கலைப்பு செய்யப்பட்ட பிறகு பிஜியில் நடைபெற்ற **2வது பொதுத் தேர்தல்** இதுவாகும். இதற்கு முன் **2014ல்** நடைபெற்றது.

## விளையாட்டு நிகழ்வுகள்

- ஜெர்மனியின் காட்பஸ் நகரில் நடைபெற்ற **ஆர்ட்ஸ்டிக் லைஜிம்னாஸ்டிக் உலக கோப்பை** போட்டியில் வால்ட் பிரிவில் **தீபா கர்மாகர் வெண்கலப் பதக்கம்** வென்றுள்ளார்.
- குறிப்பு:
  - இதற்கு முன் துபாயில் உள்ள மெர்சினில் நடைபெற்ற **FIG** ஆர்ஸ்டிக் உலக சேலஞ்ச் கோப்பை போட்டியில் தீபா கர்மாகர் தங்கம் வென்று, **உலக அளவிலான சேலன்ஜ் போட்டியில் தங்கம் வென்ற முதல் ஜிம்னாஸ்டிக் வீரராக** உருவெடுத்தது குறிப்பிடத்தக்கது.

## அறிவியல் மற்றும் தொழில்நுட்பம்

- **காசநோயை அழிக்கும் விதமாகவும், அது தொடர்பான விழிப்புணர்வு** மற்றும் மருத்துவ வசதிகள் குறித்து போதிய

வழிகாட்டுதல் வழங்கும் விதமாக, **டிபி மித்ரா (காசநோயாளிகளின் நண்பன்)** என்னும் புதிய செயலியை, ஒடிசா மாநில சுகாதாரத் துறை சார்பில் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

- இந்த புதிய செயலிமூலம் காசநோயாளிகள் தங்களுக்கு தேவையான மருத்துவ சேவைகளை உடனுக்குடன் பெறும் நடைமுறை தொடர்பான வசதிகளை பெற்றுள்ளது.

## நியமனங்கள்

- பனராஸ் இந்து பல்கலைக் கழகத்தின் புதிய துணை வேந்தராக நீதிபதி **கிரிதர் மால்வியா** நியமிக்கப்பட்டுள்ளார்.
    - கிரிதர் மால்வியா, **1988 – 1998 வரை அலகாபாத்** உயர்நீதிமன்றத்தின் தலைமை நீதிபதியாக பணியாற்றினார் என்பது குறிப்பிடத்தக்கது.

## முக்கிய தினங்கள்

- **தேசிய பால் தினம் - நவம்பர் 26**
    - இந்தியாவின் **"வெள்ளைப்புரட்சியின் தந்தை வர்கீஸ் குரியன்"** அவர்களின் நினைவாக ஆண்டுதோறும் அவரது பிறந்தநாளான நவம்பர் 26 அன்று **"தேசிய பால் தினம்"** கடைபிடிக்கப்படுகிறது.
- குறிப்பு:
    - உலகளவில் பால் உற்பத்தியில் **இந்தியா முதலிடத்தில்** உள்ளது. உலக பால் உற்பத்தியில், 18.5 சதவீதம் இந்தியாவின் பங்காகும்.

We Shine Academy ™